சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாள் பி.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் திருப்பூரில் குடியிருக்கிறேன் என்றால் சரி தான். மேட்டுப்பாளையம் பகுதியில் எனக்கு குடியிருப்பு உள்ளதா என்றால் மேட்டுப்பாளையத்தில் உள்ள தோட்டத்தில் தான் தற்போது குடியிருக்கிறேன். பொதுவாக நான் மேட்டுப்பாளையம் பகுதியில் தோட்டம் வாங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்து சுமார் 11 ஆண்டுகள் ஆகிறது. பிராதில் தபசில் சொத்தின் புல எண் என்ன என்றால் 747/1c. புல எண்.747/2 ல் உள்ள வாதியின் வழிப் பாதையை பொருத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். புல எண்.747/2 ல் உள்ள வழி பாதையின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. அந்த பாதை தென் வடல் பாதை என்றால் சரி தான்.

(வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறிக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/. கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.